**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9–ம் நாள் வியாழக்கிழமை பிரதிவாதிகள் தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி உதவியாளர் திருமதி. பாண்டிச்செல்வி என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | T.G.**கண்ணன்** | தொழில்: | |
| த.பெ: | T.R.கோபாலாச்சாரி | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**09.04.2026 OS.14/2019 பி.வா.சா.2. T.G.கண்ணன்**

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**:

1) 1ம் பிரதிவாதி எனது மனைவி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தைப் பொறுத்து ஆதிமுலம் மற்றும் அவரது சகோதரர்கள் ந.ராசுத்தேவர், பாலுத்தேவர், மணித்தேவர் ஆகியோர்கள் ஒரு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்ததாக சொல்லி அதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதி எனக்கு கிரைய உடன்படிக்கை எழுதிக்கொடுத்துள்ளார் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய உடன்படிக்கையை நான் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்தை எனது மனைவி 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எனது அனுமதியின் பெயரில் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

2) மேற்கண்டவாறு கிரையம் செய்த வகையில் கிடைத்த கிரையத் தொகையை எனது மனைவி 1ம் பிரதிவாதி ஆதிமூலம் வகையறாவிடம் கொடுத்துவிட்டார்களா என்றால் கொடுத்துவிட்டார். எனது மனைவி ஆதிமூலம் வகையறாவிற்கு மேற்படி கிரையத் தொகையை கொடுத்ததாக நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. மேற்படி கிரையம் செய்த வகையில் கிடைத்த தொகையை ஆதிமூலம் வகையறாவிற்கு கொடுத்ததற்கு ஏதேனும் ரசீது உள்ளதா என்றால் ரசீது உள்ளது.

3) மேற்படி ரசீது யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் உள்ளது அதனை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி கிரையத் தொகையை ஆதிமூலம் வகையறாவிற்கு கொடுக்கவில்லை என்றாலும் அதற்கான ரசீது என்னிடம் இல்லை என்றாலும் அதனால் தான் இது நாள் வரை இந்நீதிமன்றத்தில் மேற்படி ரசீது எதனையும் நான்

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.09 18:00:45 +0530

இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல ரசீது வைத்துள்ளேன் ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

4) ஆதிமூலம் எனது மனைவிக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் 18.05.1998 ல் ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய உடன்படிக்கை பத்திரம் எனது மனைவி எனக்கு எழுதிக்கொடுத்தாரா என்றால் ஆதிமூலம் அவர் மட்டும் தனியாக எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணத்தில் தாவா சொத்து இல்லை. எனக்கு எனது மனைவி எழுதிக்கொடுத்த கிரைய உடன்படிக்கையில் தாவா சொத்து உள்ளதா என்றால் தாவா சொத்து உள்ளது. மேற்படி ஆவணத்தின் தேதி 18.05.1998 என்றால் சரிதான்.

5) எனக்கு தாவா சொத்தைப் பொறுத்து கிரைய உடன்படிக்கை ஏற்படுத்திக் கொடுத்த பின்னர் எனது மனைவிக்கு தாவா சொத்தை 3ம் நபர்களுக்கு கிரையம் செய்து கொடுக்க உரிமை எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. எனது மனைவி 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தைப் பொறுத்து எழுதிக்கொடுத்துள்ள கிரைய ஆவணத்தில் எனது ஒப்புதலோடு கிரையம் செய்து கொடுப்பதாக ஏதேனும் வாசகம் கண்டுள்ளதா என்றால் இல்லை ஆனால் அதில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன்.

6) தற்போது தாவா சொத்தின் அனுபவம் ஆதிமூலம் வகையறா வசம் தான் உள்ளது என்றால் சரியல்ல. தற்போது தாவா சொத்தின் அனுபவம் யார் வசம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து நாளது வரை ஆதிமூலம் வகையறா வசம் தான் உள்ளது என்றாலும் எனது மனைவி கிரையம் கொடுத்த 3 முதல் 5 பிரதிவாதிகள் வசம் தாவா சொத்தின் அனுபவம் இல்லை என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது.

7) எனது மனைவி 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் நாளது தேதி வரையில் ஊர்ஜிதத்தில் வரவில்லை என்றாலும் தாவா சொத்து நாளது தேதி வரையில் ஆதிமூலம் வகையறாவின் அனுபவத்தில் தான் உள்ளது என்பதை தெரிந்து கொண்டு நான் அதற்கு விரோதமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ஆதிமூலம் எனது மனைவிக்கு 04.07.1997 ம் தேதியில் எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணத்தை 02.08.2001 ம் தேதியில் ரத்து செய்துவிட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் 2012 ம் ஆண்டில் வழக்கறிஞர் சட்ட அறிவிப்பு வந்த பின்னர் தான் தெரியும்.

8) ஆதிமூலம் எனக்கு வேறு சில சொத்துக்களைப் பொறுத்து கிரைய உடன்படிக்கை எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி கிரைய உடன்படிக்கையின் அடிப்படையில் கிரைய பத்திரம் பதிவு

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.09 18:00:52 +0530

செய்து கொடுக்க வேண்டும் என 2013 ம் ஆண்டு சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் ஏற்றதை ஆற்று பரிகாரம் கோரி நான் தாக்கல் செய்த வழக்கு எனது தவறுகையின் காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான் தற்போது மேற்படி தள்ளுபடியான வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கை நான் மீண்டும் கோப்பிற்கு எடுக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்க வில்லை என்றாலும் அதனால் தான் அது குறித்து எவ்வித ஆவணத்தையும் நான் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல தாவா வழக்கிற்கும் மேற்படி ஆவணத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை.

9) எனது மனைவி 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தைப் பொறுத்து எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரத்தை ஊர்ஜிதப்படுத்த வேண்டும் என்பதற்காக எனது மனைவி சார்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(மறுவிசாரணை இல்லை).**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.09 18:01:00 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam